# வாக்கியம் அமைத்தல்

( உ சொற்கள் )

1. உயிர்

விடுதலைக்காக மக்கள் பலர் உயிர் துறந்தார்கள்.

2. உடை

சேற்றால் உடை அழுக்கானது.

3. உயிர் எழுத்துக்கள்

உயிரெழுத்துக்கள் மொத்தம் பன்னிரெண்டு.

4. உறவினர்

வீட்டிற்கு உறவினர்கள் வந்துள்ளனர்.

5. உணர்வு

பிறர் மேல் பகை உணர்வுடன் வாழக்கூடாது.

Notebook writer

6. உழைப்பு

உழைப்பு உயர்வு தரும்.

7. உண்மை

நாம் எப்பொழுதும் உண்மை பேச வேண்டும்.

8. உழு

உழவர் நிலத்தை உழுதார்.

9. உடற்பயிற்சி

உடற்பயிற்சி செய்தால் ஆரோக்கியமாக வாழலாம்.

10. உச்சி

மலை உச்சியில் நின்று பாடினேன்.

11. உல்லாசம்

மாணவர்கள் உல்லாச சுற்றுலா சென்றனர்.

Notebook Writer

12. உயர்நிலை

சுரேஷ் அரசு உயர்நிலைப் பள்ளியில் படிக்கிறான்.

13. உறுப்பு

அனைவரும் உறுப்பு தானம் செய்ய வேண்டும்.

14. உற்பத்தி

வீட்டிலே மெழுகுவர்த்தி உற்பத்தி செய்யலாம்.

15. உழவு

உழவு தொழிலைப் போற்ற வேண்டும்.

16. உருவம்

யானையின் உருவம் பெரியது.

Notebook writer